மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண். 113/2016

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஞானசௌந்தரி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

22.09.2023 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனது சொந்த ஊர் பழையகோட்டைக்கு அருகில் உள்ள சித்தம்பலம் என்றால் சரிதான். தெய்வசிகாமணியின் ஊர் சிலம்பகவுண்டன் வலசு என்றால் சரிதான். இரண்டு ஊர்களுக்கும் இடையே 20 மயில் தூரம் இருக்கும். எனது வழக்கில் நான் தெய்வசிகாமணியை திருமணம் செய்து கொண்டு ஒரே வருடம் மட்டும் குடும்பம் நடத்தியதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை 2 வருடம் குடும்பம் நடத்தினேன். தெய்வசிகாமணி என்னை வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தியதால் தான் நான் அவரைவிட்டு என் பெற்றோர் வீட்டிற்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் வரதட்சனை கேட்கவில்லை ஆனால் என்னை கொடுமைகள் செய்தார்.

2. திருமணமாகி இரண்டு வருடங்கள் கழித்து எனது பெற்றோர் வீட்டிற்கு வந்ததற்கு பின்னிட்டு நான் மீண்டும் என் கணவர் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் இறப்பிற்கு நான் செல்லவில்லை என்றால் இல்லை போனேன். நான் செய்ய வேண்டியை சீர் வரிசைகளை செய்துவிட்டு வந்தேன். எனது கணவர் கோவையில் இறந்தார். என் கணவர் எந்த மருத்துவமனையில்

அனுமதிக்கப்பட்டிருந்தார் அவர் என்ன நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் என் கணவரோடு சேர்ந்து வாழ்வதற்கு நீதிமன்றம் அல்லது காவல் நிலையம் மூலமாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

3. நான் பிரிந்து வந்ததற்கு பின்பு என் கணவர் சிலம்பகவுண்டன் வலசில் என்ன செய்துகொண்டிருந்தார் எப்படி வாழ்க்கை நடத்தினார் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். மற்றவர்கள் சொல்லித்தான் விபரம் தெரிந்து எனது வாக்குமூலத்திலும் எதிர் வழக்குரையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1 முதல் 2 வாதிகளை நான் இதுவரை பார்த்தில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் வாதி தரப்பில் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1 ம் வாதி 07.04.1971 ம் ஆண்டு தெய்வசிகாமணியை பழனி திருஆவினன்குடி கோவிலில் வைத்து திருமணம் செய்துள்ளார் என்றால் இல்லை நான் தான் முதல் மனைவி.

4. 27.08.1972 ல் 1 ம் வாதிக்கும் தெய்வசிகாமணிக்கும் 2 ம் வாதி வாரிசாக பிறந்துள்ளார் என்றால் இல்லை. 1, 2 வாதிகளுக்கு இந்த வழக்கில் எனக்காக ஆஜராகியுள்ள வழக்கறிஞர் மூலம் கடந்த 24.12.2013 அன்று கேவியட் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் ஆமாம். அந்த அறிவிப்பில் 1 ம் வாதி தெய்வசிகாமணியின் மனைவி என்று சொல்லித்தான் அந்த அறிவிப்பை அனுப்பினேன் என்றால் இல்லை. அந்த அறிவிப்பில் 2 ம் வாதியை தெய்வசிகாமணியின் மகன் என்று குறிப்பிட்டுத்தான் அந்த அறிவிப்பை அனுப்பினேன் என்றால் ஆமாம். 1, 2 வாதிகளுக்கு தெய்வசிகாமணியின் சிலம்பகவுண்டன் வலசு வீட்டு முகவரியை குறிப்பிட்டுத்தான்

அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த அறிவிப்வில் 43 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கும் தெய்வசிகாமணிக்கும் திருமணமானதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

5. அதன்படி எனக்கும் தெய்வசிகாமணிக்கும் 1971ம் ஆண்டிலேயே திருமணமானதாக அர்த்தமாகிறது என்றால் இல்லை. அந்த அறிவிப்பில் 1ம் வாதியுடன் தெய்வசிகாமணி தகாத உறவு வைத்திருந்ததால் தான் 2ம் வாதி பிறந்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி அறிவிப்பிலேயே 2ம் வாதி தெய்வசிகாமணியின் மகன் என்பதை ஒப்புக்கொண்டு தற்போது வழக்கிற்காக 2ம் வாதி தெய்வசிகாமணிக்கு பிறக்கவில்லை என்று பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் வாதிக்கு தெய்வசிகாமணிதான் முன்னின்று திருமணம் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் வாதிகள் தாக்கல் செய்துள்ளதும் எனக்கு தெரியாது.

6. தெய்வசிகாமணி 2ம் வாதியை மகன் என்று ஒத்துக்கொண்டு தான் தனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து தெய்வசிகாமணியும், 2ம் வாதியும் பாகக்கரால் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தெய்வசிகாமணி மற்றும், 1, 2 வாதிகள் சிலம்பகவுண்டன் வலசில் ஒன்றாக குடும்பம் நடத்தியதற்காக குடும்ப அட்டைகளை ஒப்படைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தெய்வசிகாமணி 2ம் வாதி பிறப்பை பதிவு செய்ய தாராபுரம் நீதிமன்றத்தில் மனு கொடுத்து அனு அனுமதிக்கப்பட்டு காங்கயம் வட்டாட்சியரிடம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் வாதி வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தியுள்ளதாக சொல்லியதற்கான ஆதரவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சங்கதிகளை இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தற்போது எனது கணவர் பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவரின் சொத்துக்களை பொறுத்து ஏற்பட்டுள்ள தான செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கிரைய ஆவணங்களைப் பொறுத்து இதுவரை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. இதுவரை ஜீவனாம்சத்திற்காக சட்ட நடவடிக்கைகள் ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால் பேப்பரில் விளம்பரம் கொடுத்துள்ளேன். வேறு நடவடிக்கை எடுக்கவில்லை. 2ம் வாதி தனக்கு பிறந்த மகன் என்ற காரணத்தினால் தான் தெய்வசிகாமணி தாராபும் நீதிமன்றத்தில் அவரது பிறப்பை பதிவு செய்யக்கோரி மனுக்கொடுத்து அதை பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான்.

7. தெய்வசிகாமணி பண்டாரம் என்பவர் 1ம் வாதி பெயருக்கு 4 ஏக்கர் நிலம் எழுதி வைத்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் குடும்பத்திற்கு நான் திருமணம் ஆகி சென்றபோது 150 ஏக்கர் நிலம் இருந்தது. நில உச்சவரம்பு சட்டத்தில் இருந்து சலுகைகள் பெறுவதற்காக 1ம் வாதியை தனது குடும்ப உறுப்பனர் என்று காட்டிக்கொள்ளாமல் 4 ஏக்கர் நிலத்தை தெய்வசிகாமணி அவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் இல்லை 10 ஏக்கர் கிரையம் செய்து கொடுத்துள்ளார். தெய்வசிகாமணி வங்கியில் ஒரு லட்சம் வைப்பீடு செய்து அதற்கு நாமினியாக 1ம் வாதியை நியமித்திருந்தார் என்றும், அவர் இறந்த பின் 1ம் வாதி அந்த பணத்தை பெற்றுக்கொண்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவரின் தாயார் பெயர் பருவதம் அம்மாள். அவர் 1ம் வாதியை தெய்வசிகாமணி செய்துகொண்டது பிடிக்காமல் தான் அவரை விட்டு தன் மகள் ஊரான திருப்பூருக்கு குடிபோய்விட்டார் என்றால் சரியல்ல.

8. முதல் வாதி வேறு ஜாதியை சேர்ந்தவர் என்றால் சரிதான். வேறு ஜாதியை சேர்ந்தவரை தெய்வசிகாமணி திருமணம் செய்து கொண்டததால் தான் என் மாமியார் மற்றும் உற்றார் உறவினர் அவரோடு விரோதமாக இருந்தார்கள் என்றால் ஆமாம். 1978ம் ஆண்டு நான் தெய்வசிகாமணியை திருமணம் செய்தது உண்மை என வைத்துக்கொண்டால் கூட நான் அவரின் சட்டப்படியான மனைவி இல்லை என்றால் சரியல்ல. 1971ம் ஆண்டிலேயே தெய்வசிகாமணியை திருமணம் செய்து கொண்ட 1ம் வாதி கடைசிவரை அவருடன் திருமணம் நடத்தினார் என்றால் சரியல்ல. 1, 2 வாதிகள் தான் தெய்வசிகாமணியின் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரியல்ல. நான் சட்டப்படி தெய்வசிகாமணியின் மனைவியல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கான பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்